## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.** 113/2024

**வாக்குமூலம்.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது இஸ்மாயில் | தொழில் | |
| த/பெ. | காதர் மஸ்தான் | வயது | 79 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 10.10.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் வாதி என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபணவாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். அதில்லுள்ள கையெழுத்து என்னுடையது தான் 16.05.2021ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு செண்பகவள்ளி மற்றும் தண்டாயுதபணி எழுதிக்கொடுத்த பதிவு கிரைய பத்திரம் இணையதள பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். 1ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணம் 1ம் பிரதிவாதி பெயரில் செண்பகவள்ளி மற்றும் தண்டாயுதபணியால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதால் அந்த ஆவணத்தை 1ம் பிரதிவாதி அல்லது செண்பகவள்ளி அல்லது தண்டாயுதபணி மூலம் தான் குறியீடு செய்யமுடியும் என்றும் வாதியின் குறியீடு செய்யமுடியாது என்றும் மேற்படி ஆவணத்தின் அசலை நீதிமன்றத்திற்கு தருவிக்காமல் பதிவிறக்க நகல் தாக்கல் செய்யமுடியாது என்று ஆட்சேபிக்கப்பட்டது வழக்குரையில் பரிசிலித்துப்பார்க்கும்போது வழக்குரை பத்தி 3ல் வாதியின் மகனான 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்து 16.05.2001ஆம் தேதியில் கிரையம் பெறப்பட்டதாகவும் அதனை தொடர்ந்து வாதி அவருடைய மகன் பெயரிலேயே வீடு கட்டி குடியிருக்கவைத்ததாகவும் 1ம் பிரதிவாதி வாதிக்கு 21.05.2001ஆம் தேதியில் ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி வைக்கப்பட்டதாக கட்சி செய்யப்பட்டு வழக்குரை பரிகாரமாக மேற்படி 21.05.2001ஆம் தேதிய பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில் பத்தி 3ல் 1ம் பிரதிவாதி வெளிநாட்டில் சம்பாதித்த தொகையை கொண்டும் தனது மனைவி நகையை அடகு வைத்தும் வழக்கு சொத்தை 16.05.2001ஆம் தேதி கிரையம் பெற்றதாகவும் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சுபபோக வாழ்கை வாழ்ந்து வருவதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

1வது வழக்கெழுவினாவை தீர்மானிப்பதற்கு மேற்படி கிரைய ஆவணம் அத்தியாவசிய ஒன்று ஆகும். மேற்படி ஆவணத்தில் வாதி தரப்பினார் இல்லை என்றாலும் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டது பற்றி 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டதாகவும் மேற்படி ஆவணமானது வழக்கில் 1வது வழக்கெழுவினாவை தீர்மானிக்க அவசியமான ஒன்று என்பதாலும் மேற்படி ஆவணத்தின் அசலை பின்னாளில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்வதில் தடை இல்லை என்பதாலும் வாதி மேற்படி ஆவணத்தில் தரப்பினார் இல்லை என்பதால் மேற்படி ஆவணத்தின் பதிவிறக்க நகலை தாக்கல் செய்வதில் தடையில்லை என்பதால் 1ம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணை நிராகரிக்கப்பட்டு மேற்படி ஆவணமானது வா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.05.2001ஆம் தேதிய 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிவைத்த பொது அதிகார ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன்.மேற்படி ஆவணமானது ரத்து செய்யப்பட்டு விட்டது என்று 2ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.11.2024 தேதிய தாவா சொத்துக்கான நகர நிலஅளவை பதிவேடு கணினி பதிவிறக்கநகல்கள் எண்ணிக்கை 3 தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.10.2024 தேதிய எனது வழக்கறிஞர் மூலம் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் தாக்கல் செய்கிறேன். அ து வா.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.10.2024ஆம் தேதிய 1ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.10.2024ஆம் தேதிய 1ம் பிரதிவாதிக்கு வாதி கொடுத்த மறு பதில் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.11.2024ஆம் தேதிய 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.6க்கு கொடுத்த பதில் அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பிடப்பட்டு வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.11.2024 தேதிய நான் 2ம் பிரதிவாதிக்கு கொடுத்த ஆட்சேபணை மனு கைநகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ–10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**